15/5/86

அறிவாளி

மலர் 1 கார்த்திகை 1985 விலை ரூபா 1-00 இதழ் 9

நெடுமாறன் யாழ் விஜயம்

தமிழ்நாடு காந்தி, காமராஜர் காங்கிரஸ் திரு ப. நெடுமாறன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து சந்திக்க வேண்டிய பலரைச் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இடம்பெயர்ந்தோரைப் பராமரிக்கும் நிலையங்களுக்கு (அகதிமுகாம்) விஜயஞ் செய்து அங்கு தங்கியுள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் இடர்களைக் கேட்டறிந்தார்.

பத்திரிகை நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தார். இவ்வாறு விஜயமளித்த வட்டாரங்கள் 'அறிவாளிக்கு' தகவல் தருகின்றன.

இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் பாழ்ப்பாணம் விஜயம் செய்து பயணக் கட்டுரை எழுதியது உங்களுக்கு நினைவிருக்கும்.

சோஷலிசம் வரக்கூடாது என்பதற்காக

அவன் ஆட்டுகிறான்
* இவன் அழிக்கிறான்

தாய்மொழிப் பற்றுள்ளவன் தப்புவான் விளங்கிக்கொள்ள காலம் செல்லாது

கொலைகள் ஒருபுறம், கொள்ளைகள் மறுபுறம், சமரசப் பேச்சுக்கள் ஒருபுறம், ஒத்திவைப்புகள் மறுபுறம். யுத்த நிறுத்தம், ஒருபக்கம் யுத்த உடன்பாடு மறுபக்கம், கூட்டணி ஒருபக்கம், இதில் தலைமை எடுக்க நினைத்தவர்கள் வேறுபக்கம், ஒரு இயக்கம் ஒருபக்கம், மற்ற இயக்கம் மறுபக்கம்.

ஒருபகுதி ஒரு அறிக்கை மறுபகுதி வேறொரு அறிக்கை இயக்கங்களுக்கு மறைமுக எதிர்ப்பு தெரிவித்து பிரசுரம் ஒருபுறம், பத்திரிகையில் செய்தி போடு என்று ஒரு சாரார், போடாதே என்று மறுசாரார்.

இப்படியான செய்திகளை வாசிக்கிறோம், கேட்கிறோம், காண்கிறோம் இல்லையா?

இதெல்லாம் என்ன விளையாட்டு? உங்களுக்கு விளங்குகிறதா?

இந்த விளையாட்டுகள் தற்செயலாக நடைபெறுபவையல்ல, வருபவையல்ல, ஆட்டிப் படைப்பவனால் மறைவில் இருந்து செய்யப்படுபவை இவ் விளையாட்டுக்கள் என்பதில் சந்தேகமில்லை.

யார் இந்த ஆட்டிப்படைப்பவன்? அவன் வேறெங்குமில்லை. எது இன்றைய முக்கிய பிரச்சனையோ அந்தப் பிரச்சனையில் அவனும் தானும் 'ஒரு ஆள்' என்று சொல்லி அதுக்குள் ஒழிந்து நின்று விளையாடுகிறான். அவனை இன்னமும் சிலர் அல்லது பலர் கண்டுபிடிக்கவில்லை

ஆம், தமிழ் தனிநாடு என்ற போராட்டத்துள் போர்த்துக் கொண்டு 'அவன்' நின்று எல்லாரையும் ஆட்டிப் படைக்கிறான்.

அதனால்தான் நீங்கள் கேள்விப்படுகிற, காண்கின்ற கொலை, கொள்ளைகள் நடக்கின்றன.

இதனால் அப்பாவியான அதேநேரம் வீரம்மிக்க உண்மையான தாய்மொழி பற்றுள்ள இளைஞர்கள் பலர் தமது உயிரை இழக்கின்றனர்.

இவர்கள் இறந்தொழிய வேண்டும் என்பதும் 'அவனின்' விருப்பம். இந்த இறந்தொழிபவர்கள் யார்? ஏழைப் பெற்றோரின் பிள்ளைகள். சமுதாயத் தாக்கம்பெற்ற யக்கனின் மைந்தர்கள், சகோதரர் பலரைக்கொண்ட குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் யாழ்ப்பாணத்து மண்ணல்லாத இடத்தையே அதிகமாக வாழும் இடமாகக் கொண்ட வீரமிக்க இளைஞர்கள்.

இருக்கின்ற இளைஞர்கள் 'அவனை' இனம்காணத் தவறின் நீங்கள்மட்டுமல்ல உங்களைப்போல இன்னும் ஏராளம் இளைஞர்கள் மடியநேரிடும். தேவையில்லாமல் மரணிக்க நேரும். வேள்விக்கடாவாகப்போவது நிட்சயம்.

ஷோசலிசம் என்பது இன்று எல்லோராலும் உச்சரிக்கப்படுகிறது. இதனை உச்சரித்தே இன்று உயிரை எடுக்கிறார்கள் ஷோசலிசம் வரக்கூடாது என்பதற்காகவே இத்தனை கூத்துகளும் ஆடப்படுகின்றன

'விடுதலை' வேண்டிநிற்கிற தமிழர்களில் ஒருசாரார் சோஷலிசம் வரக்கூடாது என்ற கட்சியின்ர் சிறிய ஒருசாராரே அதனை வரவேற்பவராயினும் அவர்களும் அவனுள் கட்டுப்பட்டுள்ளனர். வெளியில் உள்ளவர் கதை வேறு.

ஒருசாரார், சிங்களமக்களை ஆபத்பாதய அரசு ஆள்வதையும், நாம தமிழர்களை ஆள்வதையும் விரும்புகிறவர்கள்.

இன்னொரு சாரார் உள்ளனர், அவர்கள் பிரச்சனையே தீர்ந்துவிடக்கூடாது என்று நினைப்பவர்கள். செயல்படுபவர்கள்.

இனனுமொரு சாரார் உள்ளனர், அவர்கள் நாளைக்கு ஒரு ஷோசலிச சமுதாயம அமைக்க வீறுகொண்டு எழுத்தக்க ஏழை இளைஞர்களை இன்றைய இனபபிரச்சனையை மையமாக வைதது இன்றே அவர்களை அழித்துவிட விரும்புகறவர்கள்.

இவைதான் இன்று நடக்கினறன. மேலும பல உணடு இவைகளை வளங்க நினைததால் விளங்கிக்கொள்ள காலம் எடுக்காது எனறு உண்மையான நாட்டுபபறறு தாய்மொழிப பறறுளளவாகள சொலகிறார்கனை.

சி. ஐ. ஏ. என்றால் எனன்?

ஏழைகளை மேலும் ஏழையாக்கும்
நாட்டிலே குழப்பங்களை உண்டாக்கும்

சி. ஐ. ஏ பற்றி இன்று கதைக்காத தமிழ்மக்கள் இலலை எனலாம்.

ஒரு பகுதியை, ஒரு தலைவரை இன்னொரு பகுதி இன்னொரு தலைவர் சி. ஐ. ஏ என்கினறனர். ஒருவர்கொருவர் சி. ஐ. ஏ என சொல்லிக்கொள்ளுகின்றனர்.

சி. ஐ. ஏ என்றால் என்ன?

இதுபறய புத்தகங்கள் பல உணடு ஆனால சுருககமாக இதுபற்றக் கூறுவதானால்...

ஒருநாட்டில் ஏழை, எளிய மகள் உணவு, உடை, உறைவிடம உழைபபு எனபன பெறறு வாழுகிற ஒரு அரசியல, சமூக அமைபபு எந்த ஒரு நாடடிலும ஏறபடாமல தடுककும் வேலையைச் செய்வதே சி. ஐ. ஏ யின தலையாய பணியாகும.

தொழிலாளர்கள் வேலையில்லாமலும், பட்டினியாலும, இருக்க இடமில்லாமலும், நலல உடையிலலாமலும் வாழ்ககை நடத்துவதை அது ஊகுமபிச் செயல்படுகிறது.

அவாவது, சோஷலிசம் என்று சொல்கிற 'சமஉடமை' சமூக பொருளாதார, அரசியல் அமைப்பு வராமல் தடுக்க அது பாடுபடுகிறது.

ஏன் அபபடி செய்கிறது? ஏனென்றால்... ஏழைகள் கூடுதலாக வாழ்ந்தால்தான் அவ் ஏழைகள் தமது உயிரைக் காப்பற்ற எப்படியும், எங்கேயாவது, எவ்வளவு கூலி அதாவது சம்பளத்துக்காவது வேலை செய்ய, தொழில் பார்க்க விரும்புவார்கள். இப்படி இவ் ஏழைகள் வேலை செய்ய முன்வரும்போது பெரும முதலாளிகள, பெரும் தோட்டங்களை, நிலங்களை உடையவர்கள் இவர்களைக் கொணடு அதிகமான கஷ்டடமாக வேலை வாங்கி மிக மிகக குறைந்த சம்பளத்தைக கொடுபபார்கள். இதனால முதலாளிகளுककும், பெரும தோட்டங்களையும வைததிருபபவாகளுककும நல்ல இலாபம ஏற்படும. இதனால முதலாளிகள மேலும, மேலும பெரிய, பெரிய பணककார ராக வந்து தமது சுகபோகங்களை அநுபவிककமுடியும்.

இந்த சி. ஐ. ஏ நிறுவனத்தை நடாததுகிறவர்கள. பெரும மூலாதனவாதிகளை இவாகளே இதறகு பணம செலவு செயகிறார்கள. சி.ஐ.ஏ அமெரிककாவில இருந்து உலகில சகல நாடுகளிலும பரவி உளள ஒரு உளவு ஸதாபனம.

இந்த சி. ஐ. ஏயில் அமெரிककர்மடடும்தான் இருककிறார்கள் எனறு இலலை.

ஒவ்வோர் நாட்டிலும் இதற்கு அந்தந்த நாட்டு ஆட்களே இருककிறார்கள். நமது நாட்டிலும் இதில் தமிழர்கள், சிங்களவர், முஸ்லிம்கள் என்று எல்லா இனத்தவர்களும் இருककிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

சி. ஐ. ஏயில் உள்ள ஆட்களை கண்டுபிடிककமுடியாது. மதத் தலைவர் சாமியார் வேசத்திலும், சமூகசேவை செய்கிற

[2-ம் பக்கம்பார்க்க]

'கொள்கைகளும கொள்ளைகளும்'
நகை,பணம்,சூறையாடல்சரியானதா

நகைக் கொள்ளை

நகைகள் கோவில்களிலும் சூறையாடல்.

இன்று யாழ்ப்பாணத்தில் நடக்கும் இவைகளையிட்டு யாழ்ப்பாண மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

பிழையான செயல் என்றே பரவலாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

யாழ்ப்பாண மக்களின் முக்கிய குறிக்கோளே பொருள் தேடுவதுதான். பொருள் தேடிவைப்போர் அவைகளை இழக்க விரும்புவார்களா? இல்லை.

பொருள் தேடிவைப்பது என்பது பொருளைப் பதுக்கி வைத்திருப்பதாகிறது. அப்படிப் பொருளைதேடிப் பதுக்கி வைத்திருப்பது என்பது ஒருவகையில் கொல்லையடிப்பாகவே இருக்கிறது. அதாவது, மக்கள் எல்லோருக்கும் சொந்தமாகவுள்ள பொருளை மக்கள் தமது தேவைக்காக உண்டாக்கி வைத்திருக்கும் பொருள் என்ற பணத்தை சிலர் சேகரித்து வீட்டில் வைத்திருப்பது, பதுக்கிவைத்திருப்பது என்பது ஒருவகையில கொள்ளையடிப்புத்தான் இது. இந்த வாழ்வு அமைப்பில் தவிர்க்கமுடியாதது. இக் கொள்ளையடிப்பை மக்கள் சமூகம் அங்கீகரிக்கிறது. மக்கள் இதனைத் தெரியாத்தனத்தால சரி எனறு வாழகனறனர்.

யாருக்குத்தான் பொருள் தேடி வைததிருக்க விருபபமலல?

காணி, வீடு இல்லாதவன் வாழமுடியாது. சீதனம் செய்ததுலவककாவிட்டால் பெணை எனபவள விலைபோக மாடடாள.

எனவே பொருள் தேடுவதெனபது அதாவது சொத்துகளைச சேகரிததுவைததிருபபதென்பது இனறைய நம் வாழுவல அவகயமாककப்பட்டுளளது.

இதறகாக லட்சம், லட்சமாகச சோததுவைததிருककவேணடுமா?

இது நியாயம் என்பதே மककள் எண்ணம்.

ஒரு இடத்தில் மண் குவிककப்படுமானால இன்னொரு இடத்தில் பள்ளம ஏற்படடே தீரவேணடும். இது நியதி அதாவது விதி.

ஆனால பள்ளம் ஏற்படும் இடம தன்னை உணாநதுக

[2-ம் பக்கம் பார்க்க]

உண்மையை உண்மையாய் எழுதுங்கள்

நீண்டகால இடைவெளிக்குப் பின் யாழ்ப்பாணப் பகுதியிலே இலக்கிய கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் நடைபெறுகின்றன.

இது நல்ல அம்சம்தான்

ஆனால் இப்போதும் அதே ஆட்கள், அதேகூட்டம்தான் அதே அது'

இலக்கியங்களால் கதை 'கட்டுரை, கவிதை என்ற இவைகளால் யாழ்ப்பாண மக்களின் மனத்தை எந்தவிதத்திலும் மாற்றிவிடமுடியாதா?

அல்லது ஏன் எழுத்தாளர்கள் அன்றும், இன்றும் 'அதையேதான்' செய்துகொண்டிருக்கின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் இன்றைய பிரச்சனைகளை எழுத எமது இலக்கிய கர்த்தாக்களுக்குத் துணிவு இல்லையா? 'எழுதினால் பிரச்சனை' என்ற பயமா?

இலककியம் மக்கள் சமுதாயததுக்கே தவிர எழுதுகிறவர் பெயர் எடுப்பதறककல.

மக்களை சிந்திकक வைத்து புதிய மாறறம் கொணடுவருவதற்கே இலக்கியங்கள் எழுதுகிறவரின் தனிப்பட்ட 'அந்த' வாழ்ककையைமறை

[2-ம் பக்கம் பார்க்க]

அரியகுட்டி .அப்பு

மெய்யே தம்பி! புதிசா கொஞ்சமந்திரிமார் தெரிவு செய்யப்பட்டிருக் கெண்டு கதைக்கினம் உண்மையே?

ஆசிரியர் கருத்து

எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே உன்னை
இடறவைத்து தள்ளப்பாக்கும் குழியிலே

போராட்டத்துள் போராட்டம்

கோழிக்குள் முட்டை என்றாலென்ன, முட்டைக்குள் கோழி என்றாலென்ன... இந்த 'உள்' என்பதில் பிரயோசனம் உண்டு. 'போராட்டத்துக்குள் போராட்டம்' என்பதில் அது இல்லை. 'அது' இல்லை என்பதிலும் பார்க்க, 'ஆபத்து' என்பதே சரியானது.

அகிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டம். முன்னையதிலும, பின்னையதிலும் பிரயோசனம் உண்டுதான். ஆனால் போராட்டத்துக்குள் போராட்டம் என்பதில் என்ன உண்டு. ஆபத்துண்டு. அதாவது 'போராட்டம்' என்பது இருக்கும் ஒரு நடைமுறையை விரும்பாததினால் அதனை மாற்றிவிட எடுக்கும் ஒரு வழி. இந்த எடுக்கும் வழியில் இன்னொரு போராட்டம் என்றால் அது எடுத்த அந்த வழியை மாற்றிவிட எடுக்கப்பட்ட பிறிதொரு வழி.

'மாற்றம்' காண எடுக்கப்பட்ட வழி நல்லதா, கூடாததா? முற்றிலும் சரியற்றது என்பது பொருத்தமானதுலான். ஆயினும் பரம்பரையானதை அழிக்க அது உதவுதாமென்பதில் மட்டும் சரியாகப்படுவதால் கூட 'தமது என்று கூறிவிடத் தயங்கலாம். இந்த ஓரளவு சரியான வழியை... போராட்டத்தை மழுங்கடிக்க ஒரு போராட்டம். அதுதான் ''போராட்டத்துள் போராட்டம்.''

இது கொள்ளையின் பெயரால் நடத்தப்படுகிறதாம். 'தமது' கடத்தலின் பெயரால் நடத்தப்படுகிறது. மொத்தத்தில் 'தமது' பெயரால் மறைமுகமாகவும், வெளிப்புறத்தில் பொதுமக்கள் பெயராலும் நடாத்தப்படுகிறது.

ஆம். இன்று நடக்கும் வழி மறி, ஊர்வலம் சிலதே பேசப்படுகிறது. அதுவும் யாழ்ப்பாணம் பற்றியதே. ஏழைகள், ஒடுக்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டனர். எவர் போராட்டம் நடத்தினர்? கடத்தல், கொள்ளை... போராட்டம் இன்று. சொத்துக்களை இழக்க விரும்பாத விரவ்விட்டு எண்ணத்தக்கவர்களின் போராட்டம் இன்று. அது பொது மக்கள் பெயரால் 'புனிதப் போராளிகள்' சொற்பிரயோகத்தால். மாயை. இது மாய எண்ணும் சாயல் என நம்பலாம். மக்களை... ஏழை மக்களைப் பாதிக்காமல் கொள்ளைகள் சில இல்லாமல் இல்லை. ஆனால் 'பிரசுரம்' கூறுமளவு இல்லை. இதனைப் புரிந்தவர் எத்தனை பேர்? சூட்சுமங்களைத் தெரிந்து கொண்ட ஸ்தாபனங்கள் எத்தனை?

போராட்டத்துள் போராட்டம் முதல் போராட்டத்தால் முறியடிக்க முடியாதா? மக்களை அணுகிய விதம் இப்போது சிலருக்கு வெளிச்சம் தரலாம். காலம் போய்விடவில்லை. இரவு 'டியூட்டி' வேண்டியதில்லை. இறங்கி வேலை செய்யலாமே. யாருக்கு எது தென்பட்டதோ அங்கு இறங்கலாமே. போராட்டதுள் போராட்டம் நடாத்த மக்கள் தேவை. இந்த மக்கள் எந்தப் பக்கம் வெல்லப்படுள்ளது.

வெற்றி கொள்ளவும், போராட்டம் வேற்றி பெறும விருக்கவும் நடாத்தப்பட வேண்டிய போராட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆரம்பிக்க அணி திரட்ட வேண்டும்.

தலைமொட்டை அடிப்பது அவசியமற்றது. அவசியமானது இதுவே'

கொள்ளை

[1-ம் பக்கத் தொடர்]

கொள்ளாமல் இருந்துவருவதன் விளைவே இன்றைய தலையாய பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம்

பள்ளம் இருக்குமிடம் நினைக்கிறது இது விதிவசத்தால் நடக்கிறது என்று.

இந்த விதியை நம்புகிறவர்கள்தான் லட்சம் லட்சமாகச் சொத்து சேர்த்து வைத்திருப்பதையும் நியாயம் என்கின்றனர். காரணம் அது அவன் விதி' என்று அவர்கள் நம்புவதால் ஏற்ப்படுகிறது.

விதியை நம்புவதே, நம்பவைப்பதே ஆலயங்களின் தலையாய பணி. ஆலயங்களில் சொத்துக்களும் ஆண்டவன் பெயரால் சேர்க்கப்பட விதி துணை நிற்கிறது.

எது விதி என்பது?

அதுதான் விதியின் விதி

எனவே,சொத்துக்கள் குவிக்கப்படுவது நியாயம் என்கின்றது மக்கள் கூட்டம்.

ஆலய சொத்து எதற்கு உபயோகமாகிறது என்பதோ தனியார் சொத்துக்கள் எவற்றுக்குள் பாவிக்கப்படுகிறது என்பதோ இங்கு ஆளமாகப்

களிடம் உளள பலவீனமான குணம். தமிழ் சமூகத்தின் விதியின் பலமும், பலவீனமும் இங்கேயே உள்ளது.

எனவே சொத்துச் சேர்க்கும் கொள்கையை ஆதரிக்கும் மக்கள்மத்தியிலிருந்து, அதை நியாயம் என்கிற மக்கள் மத்தியிலிருந்து ஒரு துரும்புக்கூட அசைவது ஏற்கப்படக்கூடியதல்ல.

எனவேதான் கொள்ளைகளை அது நகையாயிருந்தாலென்ன அந்த நகைகள் ஆலயத்திலிருந்தாலென்ன, தனியாரிடமிருந்தாலென்ன அவைகள் கொள்ளையடிக்கப்படுவதை, சூரையாடப்படுவதை மக்கள் விரும்பவில்லை.

மக்கள் இவைகளை விரும்பாதவர்களாக இருக்க பயிற்றுப்பட்டு இருக்கிறார்கள். பயிற்சி கொடுக்கிறவர்கள் பலமான பிரசாரகர்களாக இருக்கிறார்கள். விதி என்பது இதற்கு உறறதுணையாய் இருக்கிறது. எனவே மக்கள் என்போர் கொள்ளையை விரும்பவில்லை.

மக்கள் விரும்பாததை எவரும் செய்யக்கூடாது.

ஏனென்னில் மக்கள் வாழத்தான், மக்களின் நல்வாழ்வுக்

நடக்கின்றன. 'விடுதலை' என்று போராட்டத்தின் போது கூறப்படுவதன் அர்த்தமும் இதுதான்.

கேட்டால் கொடுக்கப்படுமா? என்பது ஒரு கேள்வி. இது நல்ல கேல்விதான்.

ஆனால் விரும்பச்செய்ய முயற்சி எடுத்தால் என்ன? அப்படிச் செய்தபின் செய்யலாமே.

ஆனாலும் ஆண்டவன் விடயத்தில் நம்பிக்கை பல பத்து ஆண்டுகள் கழிந்த ஷோசலிச நாடுகளிலும் இருக்கின்றனவே.

கொள்ளைகளைச் செய்பவர் இக் கொள்ளையடிப்புக்களை எதற்குப் பாவிக்கின்றனர். என்பது ஆராயப்பட்டதனால் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். என்று கூறுவதற்கில்லை.

சொத்து சூரையாடலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அவ்வளவுதான்.

இக்கொள்ளைகளை ஏற்காத மக்கள் பெரும் போராட்டங்களை நடாத்திவருகின்றனர். சொத்தைக் காப்பாற்றுவதற்கான மறைமுகப் போராட்டங்களா இவை? அல்லது போராட்டங்களை எதிர்க்கும் சூட்சுமமான வழியிலான போராட்டங்களா இவை? அல்லது கொள்ளைகளை எதிர்க்கும் போராட்டங்களா இவை என்பதை இன்றைய விடுதலைப் போராட்டத்தை மனப்பூர்வமாக ஏற்கிற, விரும்புகிற அனைவரும் தெரிந்து செயல்பட்டால் அது நன்மை பயக்கும்.

உண்மையை

[1-ம் பக்கத் தொடர்]

ப்பதற்கு எழுத்து ஒரு திரையாக இருக்கக்கூடாது. யாழ்ப்பாணத்து எழுத்தாளர் பலரின் எழுத்தும், செயலும் எப்படிப்பட்டவை?

இன்றைய ஆரம்ப எழுத்தாளர்கள் பலர் புதிய கவிதைகள்மூலம் தம்மை வெளிப்படுத்துகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்கும் வெளிநாடடுக்குப் போகுமட்டும், அல்லது உத்தியோகம் கிடைக்குமட்டும் இப்படி எழுதிவிடடு ஒதுங்கக்கூடாது.

இன்று இலக்கியம் ஆக்க நலல சூழ்நலை உண்டு. தவறவிடுபவர் பின்பு எழுதமுடியாது. சந்தர்ப்பவாத எழுத்தாளர், பெயருக்காக எழுதுபவர் போலி எழுததாளர், செயல் ஒன்று எழுவது வேறாக எழுதுபவர் இவர்களால் நாட்டுக்குப் பயன் இல்லை. இலக்கியத்தை யாழ்ப்பாணததவர் ஏறெடுத்தும் பார்க்காமல் விடுவதும் இவர்களால்தானே? விலை கொடுத்தும் தம் பணத்தில் புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்காதிருப்பதும் இவர்களால்தானே?

உண்மையை உண்மையாய் எழுதுங்கள் என்று இன்று கூறலாம் அல்லவா?

சி. ஐ. ஏ.

[1-ம் பக்கத் தொடர்]

போர்வையிலும், அரசியல் வாதி. இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர்கள் இருப்பார்கள்.

முன்னொரு காலத்தில் சோஷலிசவாதிகள் கடவுளை நம்பாதவர் என்றும், மனித சுதந்திரத்தைப் பறிப்பவர் என்றும் மக்கள்மத்தியில் சி. ஐ. ஏ

டிச் செய்து எலலா மக்களும் இன்பமாக வாழும் சோஷலிசத்தை மக்கள் விரும்பாமல் இருக்க வழிசெய்தது.

ஆனால் இன்று அப்படியல்ல சோஷலிசம் பேசிக்கொண்டும், உண்மையான 'விடுதலை ஆள்' என்று காட்டிக்கொண்டும், இனப்பற்று உள்ளவன் என்று சொல்லிக்கொண்டும் இப்படியே பல தினுசுகளில் மக்கள் கண்டுபிடிக்கமுடியாத வேசங்களில் சி. ஐ. ஏ செயல்படுகிறது.

சி. ஐ ஏ ஒருநாட்டில் ஒரு பக்கத்துக்கு நிற்கமாட்டாது எல்லா பக்கங்களிலும் நின்று தந்திரமாக எல்லாவற்றையும் குழப்பும்.

நாட்டிலே குழப்பம் இருப்பதை அது விருப்பும் கொலைகள், கொள்ளைகள் நடப்பபை விரும்பும்.

ஏழைமக்களை அதாவது கஸ்ட்டப்படுகிற வீட்டு வாலிபர்களை சங்கங்களில் இருந்தால் அவர்களை ஏதாவது சாட்டுச் சொலிவித்து அச் சங்ககாரராலேயே கொலை செய்விக்கும். ஆயுதம் கொடுத்து இவ் ஏழை வாலிபரைப் போராடச் செய்து மரணமடையச் செய்யும். ஒரு நாட்டு அரசாங்கப் படைமூலம் இவ் இளைஞர்களை அழிப்பிக்கும் மக்களையும், வீடுகளையும், பொருட்களையும் கொன்று, எரித்து சூறையாடும்.

ஒரு நாட்டிலே இப்படியாகப் பிரச்சனைகள் இருந்தால் ஒருபுறத்தில் பொருளாதார கஸ்ட்டநிலைமையை மறைக்கப் பெரிதும் உதவியாக இருக்கும் மறுபுறத்தில், முதலாளிகளுக்கு நன்மை செய்கிற அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சி செய்ய வாய்ப்பாக இருககும்.

ஏழைமக்கள் இவைகளைப் புரிந்தால் நன்மையுண்டாகும்

தருமசிந்தனை

அங்கும் இங்கும்
அகதி முகாம்களில்
ஆயிர மாயிரம்
தமிழர் ஜீவன்கள்
பசியது கொண்டு
விதியதை நோகையில்
இங்கே-----
தெருவதில் இருக்கும்
சிறு சிறு கோவிலில்
சிலையுடன் சித்திரத்
தேரினைச் செய்ய
மலையது போலவே
அள்ளி வழங்கும்
தமிழின மக்களின்
தர்ம சிந்தனையை
தரணியில் நாங்கள்
சாற்றுவ தெப்படி?

-ஆவூர்க் குமரன்-
நெடுந்தீவு

ஆயிரம்

யானை
இருந்தாலும் ஆயிரம்
இறந்தாலும் ஆயிரம்
இங்கே---
ஆமியில்
இருந்தாலும் ஆயிரம்
இறந்தாலும் ஆயிரம்

-நெடுந்தீவுலக்ஸ்மன்-

சிலம்புடன் வருகிறோம்

மூலதன ஆசனத்தில்
மூர்க்கமாய் அமர்ந்துகொண்டு
எங்கள் உரிமைகளைப்
பறித்தெடுத்த பாண்டியரே!
வரலாற்றுச் சிலம்புடனே
வருகின்றோம் வளக்குரைக்க

-செங்கனல்-

விழுத்தும்

பாசியும்
விழுத்தும்
வர்க்கப்
பாசமும்
விழுத்தும்
பாசிசமும் உங்களை
ஒருநாள்
விழுத்தும்

★ நம்பிக்கை ★ நாணயம்
இன்றே விஜயம் செய்யுங்கள்
இந்திரா ஜுவல்லர்ஸ்
தங்கநகை வியாபாரம்
185 A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

யாழ்நகரில்
சுவையான ஐஸ்கிறீம் குளிர்பானங்களுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள் !
ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ்சொக், ஐஸ்ஜொலி
சொக்லட் கிறிப்ஸ், சுவீற்ஸ், மட்டன் ரோல்
கேக், பற்றிஸ், சிற்றுண்டிகளுக்கு
யாழ்நகரில் சிறந்த இடம்
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நவீன வேலைப்பாடுள்ள
ஒடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ஸ்ரீ நாதன் ஜுவல்லர்ஸ்
248.கே,கேஎஸ் வீதி யாழ்ப்பாணம்.